தொழில்களில் இருக்கும் ஊழியர்களின் கூலிவிகிதம் அதிகரிக்கப்பட்டது. 1959ம் ஆண்டு முழுவதும் இவ்வதிகரிப்புக்கள் செயற்பட்டது. ஆகவே விவசாயம் அல்லாத ஏனைய தொழில்களில் இருக்கும் ஊழியர்களின் கூலிவிகிதம், குறிகாட்டியின்படி முந்திய ஆண்டிலும் பார்க்க, 10.8 சதவீதத்தால் கூடியது ஆகும். தேர்ச்சி பெறாத தொழிலாளர்களின் கூலிவிகிதம் 1958ம் ஆண்டுவரை நிதானமாக உயர்ந்து, 1952ம் ஆண்டிலும் பார்க்க 26.7 சதவீதத்தால் கூடியதாக இருந்தது. 1959ம் ஆண்டு அவர்களுடைய கூலிவிகிதத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

வாழ்க்கைச் செலவுகள் மிக உயர்ந்ததன் காரணமாக விவசாயத் தொழிலாளர், தேர்ச்சி பெறாத அரசாங்கத் தொழிலாளர், ஆகியோருடைய மெய்க் கூலிகள் முறையே 0.4 சதவீதத்தாலும் 0.3 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றன. இவ்வாழ்க்கைச் செலவின் ஏற்றத்தை ஈடுசெய்து அதற்கு மேலும் பயனளிக்கும் வகையில் விவசாயம் தவிர்ந்த ஏனைய தொழில்களில் இருக்கும் ஊழியர்களின் கூலி விகிதம் உயர்ந்தது. ஆகவே இவர்களின் மெய்க்கூலி 1958ம் ஆண்டிலும் பார்க்க 10.4 சதவீதத்தால் கூடியது ஆகும்.

**ஊழியர் சேம நிதி:** 1958ம் ஆண்டு மார்கழி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர், எல்லா அரசாங்க, ஆதிக்கமுள்ள கூட்டுத்தாபனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், வங்கிகள், பல மாளிகைகள், சிகிச்சை விடுதிகள், கணக்குப் பரிசோதனைக் கூட்டு நிலையங்கள், காப்புறுதிக் கூட்டு நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பத்து ஏக்கருக்கு மேற்பட்ட தோட்டங்கள், மற்றும் கூலி நிருணயச் சபையின் கண்காணிப்புக்கு உட்பட்ட எல்லாத் தொழில்களும் ஊழியர் சேமநிதித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

**வேலை.**

இலங்கையிலுள்ள, வேலையற்றோர்களின் உண்மையான எண்ணிக்கை பற்றிய விபரங்கள் கிடையாது. ஆயினும் தொழில் இணைப்புக் காரியாலயங்களில் பதிவு செய்தோரின் மொத்த எண்ணிக்கை 1953ம் ஆண்டிற்கும் 1959ம் ஆண்டிற்கும் இடையில் 51,546ல் இருந்து 1,28,018க்கு உயர்ந்துள்ளது எனத்தெரிகிறது. 1959ம் ஆண்டு மேற்படி எண்ணிக்கையில் ஆகக் கூடிய அதிகரிப்பு அரைத்தேர்ச்சி பெற்ற தொழிலார்களிடையேயும், தேர்ச்சி பெறாத தொழிலாளர்களிடையேயும் ஏற்பட்டது. 1958ம் ஆண்டு முறையே 32,973ம், 51,343ம் ஆக இருந்த இவர்களது எண்ணிக்கை 1959ம் ஆண்டு 33,723க்கும், 59,567க்கும் உயர்ந்தது.

**தொழில் உறவுகள்:** 1958ம் ஆண்டு தோட்டங்களில் 123 வேலை நிறுத்தங்களும், ஏனைய தொழில்களில் 79 வேலை நிறுத்தங்களும் நிகழ்ந்தன. 1959ம் ஆண்டு தோட்ட வேலை நிறுத்தங்கள் 177, ஆகவும் ஏனைய தொழில் வேலை நிறுத்தங்கள் 71 ஆகவும் இருந்தன. 1959ம் ஆண்டு வேலை நிறுத்தங்களுக்கு மூன்று பிரதான காரணங்களாவன: வேலையாற்றச் சூழ்நிலைகள் பற்றிய பிணக்குகள், வேலை நீக்கம் அல்லது வேலையும் கூலியும் இழந்தமை பற்றி எழுந்த பிணக்குகள், கூலி உயர்வு தவிர்ந்த ஏனைய காரணங்கள் பற்றிய பிணக்குகள், என தொழிற்றிணைக்களம் ஆராய்ந்து வெளியிட்டதன் மூலம் தெரிகிறது. எல்லா வேலைநிறுத்தங்களிலும், 30.2 சதவீதமானவை வேலையாற்றச் சூழ்நிலை பற்றிய பிணக்குகள் காரணமாகவும், 18.2 சதவீதமானவை வேலை நீக்கம் அல்லது வேலையும் கூலியும் இழந்தமை பற்றிய பிணக்குகள் காரணமாகவும், 16.1 சதவீதமானவை சம்பள உயர்வு தவிர்ந்த ஏனைய விடயங்கள் பற்றி எழுந்த பிணக்குகள் காரணமாகவும் நிகழ்ந்தன. 1959ம் ஆண்டு நடைபெற்ற எல்லா வேலை நிறுத்தங்களிலும் 3.2 சதவீதமானவை கூலி உயர்வுக் கோரிக்கை காரணமாக எழுந்தன.

22621
10 JUN 2009

## II. பணம் சம்பந்தமான மாற்றங்கள்

### (அ) பணநிரம்பல்

ஒப்பிட்டு நோக்கும் பொழுது, 1958ம் ஆண்டு 366 இலட்சம் ரூபாய்களால் அல்லது 3.6 சதவீதத்தால் உயர்ந்த பணநிரம்பல், 1959ம் ஆண்டு 1001 இலட்சம் ரூபாய்களால் அல்லது 9.4 சதவீதத்தால் உயர்ந்தது. இதற்கு வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புகள் 658 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தமையும், நாணய உடைமைகள் 252 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தமையுமே, காரணங்களாகும்.

பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்களுக்குப் பொறுப்பான காரணிகள், பின்வரும் அட்டவணையில் சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன.

## பண நிரம்பல் மாற்றங்கள்.
(ஆண்டு முடிவுத்தொகைகள்)

அட்டவணை 8.

இலட்சம் ரூபாய்களில்

| பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகள் | 1955–56 | | 1956–57 | | 1957–58 | | 1958–59 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | விரிவுக் காரணி-கள் | சுருக்கும் காரணி-கள் | விரிவுக் காரணி-கள் | சுருக்கும் காரணி-கள் | விரிவுக் காரணி-கள் | சுருக்கும் காரணி-கள் | விரிவுக் காரணி-கள் | சுருக்கும் காரணி-கள் |
| 1. வங்கித் தொழிலின் (நிகர) வெளிநாட்டுச் சொத்துகள் .. | 204 | — | — | 2092 | — | 822 | — | 1950 |
| 2. வர்த்தக வங்கி இயக்கங்கள்: | | | | | | | | |
| (அ) தனிப்பட்டோர் துறைக்குக் கொடுத்த கடன் .. | 930 | — | 553 | — | 534 | — | 97 | — |
| (ஆ) இறைசேரி உண்டியல் உடைமைகள், அரசாங்கப் பிணைகள், அரசாங்க உத்தரவாதப்பிணைகள் .. | 628 | — | — | 74 | — | 396 | 302 | — |
| 3. மகாவங்கி இயக்கங்கள்: | | | | | | | | |
| (அ) அரசாங்கத்திற்குக் கொடுத்த முற்பணங்கள் .. | — | — | 326 | — | 750 | — | 618 | — |
| (ஆ) இறைசேரி உண்டியல் உடைமைகள், அரசாங்கப் பிணைகள், அரசாங்க உத்தரவாதப் பிணைகள் .. | — | 77 | 422 | — | 1006 | — | 1910 | — |
| (இ) ஏனைய (நிகர) சொத்துகளும், கணக்குகளும் .. | — | 225 | — | 103 | 245 | — | — | 279 |
| 4. தவணை வைப்புக்களும், சேமிப்பு வைப்புக்களும், மற்றும் வர்த்தக வங்கிகளின் ஏனைய (நிகர) பொறுப்புக்களும் .. | — | 313 | — | 384 | — | 681 | — | 232 |
| 5. அரசாங்கப் பணமீதி .. .. .. .. .. .. | — | 609 | 493 | — | — | 364 | 640 | — |
| 6. இணக்கங்கள் .. .. .. .. .. .. .. | 1 | — | — | 08 | 96 | — | — | 96 |
| மொத்த விரிவு/சுருக்கக்காரணிகள் .. .. .. .. .. | 1763 | 1224 | 1794 | 2661 | 2631 | 2263 | 3567 | 2557 |
| பண நிரம்பல் மாற்றங்கள் .. .. ... .. .. .. | +539 | | —867 | | +366 | | +1010 | |

மூலம்: இலங்கை மகா வங்கி

முந்திய ஆண்டைப் போலவே அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட குறையை நிவர்த்திப்பதற்காக அளிக்கப்பட்ட நிதியுதவியே இவ்வாண்டும் பணநிரம்பல் அதிகரிப்பபிற்கு மூலகாரணமாயிருந்தது. இதன் விளைவாலேயே மகா வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் 2248 இலட்சம் ரூபாய்களாலும், வர்த்தக வங்கிகளின் அரசாங்க உறுதிப் பத்திரவுடைமைகள் 302 இலட்சம் ரூபாய்களாலும், அதிகரித்ததோடு அரசாங்கப் பணமீதியும் 640 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்தது.

ஆயினும் மேற் கூறியவாறு பண நிரம்பல் விரியப்படுவதை தணிக்கத்தக்க சில மாறுதல்களும் ஏற்பட்டன. வங்கித் தொழிலின் வெளிநாட்டுச் சொத்துக்களில் 1950 இலட்சம் ரூபாய்கள் வீழ்ச்சி ஏற்பட்டதினாலும், வர்த்தக வங்கிகளின் தவணை வைப்புகள், சேமிப்பு வைப்புகளில் 232 இலட்சம் ரூபாய்கள் அதிகரிப்பு நேர்ந்தமையாலும், இணக்க விடயத்தின் 96 இலட்சம் ரூபாயின் வீழ்ச்சியினாலும், பணநிரம்பல் விரிவு ஓரளவு சுருக்கப்பட்டது.

## (ஆ) வங்கித் தொழிலும் கொடுகடனும்.

**(1) மகா வங்கி:** 1959ம் ஆண்டு அரசாங்கத்திற்கு மகா வங்கி கொடுத்த கொடுகடன் குறிப்பிடும்படியாக அதிகரித்தது. வர்த்தக வங்கிகளுக்கு மகா வங்கி அடிக்கடி கடனுதவி புரிந்ததெனினும், ஆண்டு முடிவில் தீர்க்கப்பெறாத கடன்கள் ஒன்றும் இருக்கவில்லை. வெளிநாட்டுப் பற்றுவரவில் பிரதிகூலமான சென்மதி நிலுவை ஏற்பட்டு மகா வங்கியின் சர்வதேச ஒதுக்கு நிதி 1520 இலட்சம் ரூபாய்களால் வீழ்ந்தபடியால், மகா வங்கியின் மொத்தச் சொத்துக்கள் ஆக 951 இலட்சம் ரூபாய்களால் மாத்திரம் உயர்ச்சியடைந்தது.

மகா வங்கியின் பொறுப்புக்களில் நாணய வெளியீடு 430 இலட்சம் ரூபாய்களாலும், சர்வ தேசத் தாபனங்களின் வைப்புக்கள் 269 இலட்சம் ரூபாய்களாலும், வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் 39 இலட்சம் ரூபாய்களாலும், அதிகரித்தன. ஏனைய பொறுப்புக்கள் 159 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.

**(2) வர்த்தக வங்கிகள்:** இலங்கை வங்கி நான்கு புதிய கிளைகளைத் திறந்தது. ஆண்டு முடிவில் எல்லாமாக 44 வங்கி அலுவலகங்கள் இலங்கையில் இருந்தன. இவற்றில் 18 கொழும்பில் அமைந்திருக்கின்றன.

வர்த்தக வங்கிகளின் மொத்தப் பொறுப்புக்கள் 1959ம் ஆண்டு 446 இலட்சம் ரூபாய்களால், அதாவது 4.1 சதவீதத்தால் 11335 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தன. தவணை வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், ஆகியவற்றின் அதிகரிப்பு காரணமாக மாதச் சராசரி வைப்புக்கள், 926 இலட்சம் ரூபாய்களில் இருந்து, 955 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தன. இக்காலத்தில் கேள்வி வைப்புக்களின் மாதச்சராசரி 6610 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 6550 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. வங்கிகள் தத்தம் இடையே பட்ட கடன்களின் மாதச்சராசரி, 349 இலட்சம் ரூபாய்களாகச் சிறிது குறைந்த போதிலும், இது 1959ம் ஆண்டு நிலவிய இறுக்கமான பண நிலைமையைப் பிரதிபலித்து ஓர் உயர்ந்த மட்டத்திலே நின்றது.

வர்த்தக வங்கிகள் சம்பந்தப்பட்ட வங்கி வைப்புக்கள், முற்பணங்கள், முதலியனவற்றின் விபரங்களை ஆண்டுக்கு இருமுறை மகா வங்கி அளவிட்டு அறிந்த விபரங்களின் படி, 1959ம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் முடிவுற்ற ஓராண்டுக் காலத்தில், தோட்டங்கள், வியாபாரத்தாபனங்கள், ஏனைய வியாபார, வியாபாரத் தொடர்பற்ற நிலையங்கள் முதலியவற்றிற்கும், தனியாட்களுக்கும் உடைமையான மொத்த வைப்புக்கள், கட்டுப்பணங்கள் அதிகரித்தன எனத்தெரிகிறது. நிதிநிலையங்கள், உள்ளூர் ஆட்சிச்சபைகள் முதலியன வற்றிற்கு உடைமையானவை வீழ்ச்சியுற்றன.

1959ம் ஆண்டு புரட்டாதி மாதம் முடிவுற்ற ஓர் ஆண்டுக் காலத்தில் தவணை வைப்புக்கள், பிரதானமாக தேயிலைத் தோட்டங்களின் தவணை வைப்புக்கள், 364 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தன. சேமிப்பு வைப்புக்கள் 109 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இவைகள் அனேகமாக தனிப்பட்டோரின் சேமிப்புகளேயாகும். கேள்வி வைப்புக்கள்—முக்கியமாக வியாபாரிகளினதும் தனியாட்களினதும்—82 இலட்சம் ரூபாய்களால் மட்டும் உயர்ந்தன. பங்கீடு செய்யப்படாது, நிறுத்தி வைக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்களின் ஆதாயப்பணங்கள், நாட்டின் குழப்பமான சூழ்நிலை காரணமாக மீண்டும் முதலீடு செய்யப்படாமல் இருந்தமையினாலேயே, தேயிலைத் தோட்டங்களின் தவணை வைப்புக்கள் அதிகரித்திருக்கக்கூடும். தனியாட்களினது சேமிப்பு வைப்புக்களின் அதிகரிப்பு, பணவருமான உயர்வை பிரதிபலிக்கின்றது. சென்மதி நிலுவையின் நிலைமை சீர்கேடு அடைந்திருந்ததோடு, தனிப்பட்டோர் துறையின் வங்கிக் கொடுகடன் கேள்வி உயர்ந்திருந்தும், பணச் சந்தையின் நிலைமையில் 1958ம் ஆண்டிலும் பார்க்க, 1959ம் ஆண்டில், சிறிது தளர்ச்சி காணப்பட்டது. அரசாங்க வரவு செலவுத் திட்டக்குறைக்கு பண நிவர்த்தி செய்தமையின் பயனாக பணநிரம்பலில் ஏற்பட்ட விரிவே, இதற்குப் பிரதான காரணமாகும்.

வர்த்தக வங்கிகளின் மொத்தக்கையிருப்புப் பணம், ஒதுக்கு நிதிகள், அந்நிய நாணய உடைமைகள், முதலியனவற்றின் மாதச்சராசரி, ஏறக்குறைய 1958ம் ஆண்டில் இருந்தபடியே 1959ம் ஆண்டிலும் இருந்தது. 1958ம் ஆண்டு 100 இலட்சம் ரூபாய்களாக இருந்த வங்கிகளின் மேலதிகமான ஒதுக்கு நிதியின் மாதச் சராசரி 1959ம் ஆண்டு 50 இலட்சம் ரூபாய்களாகக் குறைந்தது. மகா வங்கியிடமிருந்து பல வங்கிகள் கடன் வாங்க வேண்டியும் நேர்ந்தது.

1958ம் ஆண்டு 180 இலட்சம் ரூபாய்களால் குறைவுற்ற இறைசேரி உண்டியல் உடைமைகளின் சராசரி, 1959ம் ஆண்டு 80 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. இது, அவற்றின் பொதுப்படையான நிலைமை சீரடைந்ததைக் காட்டுகின்றது. வியாபார உண்டியல் உடைமைகளும் 30 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தன. உடன் கைம்மேற் பணமாக பெறுதற்குரிய சொத்துக்களை மொத்த வைப்புக்களோடு விகிதாச்சாரமாக ஒப்பிட்டுப்பார்க்கையில், அவற்றின் மாதச் சராசரி 1958ம் ஆண்டு மாதிரியே 1959ம் ஆண்டிலும் 32.6 சதவீதமாக இருந்தது.

1958ம் ஆண்டு 3630 இலட்சம் ரூபாய்களாக இருந்த வர்த்தக வங்கிகள் கொடுத்த கடன்கள், மேலதிகப்பற்றுக்கள், முதலியனவற்றின் மாதச் சராசரி 1959ம் ஆண்டு 3950 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. இதே காலத்தில் அரசாங்கக் கடன் பத்திரங்களில் செய்த முதலீடுகளின் மாதச் சராசரி, 2960 இலட்சம் ரூபாய்களிலிருந்து 2850 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது.

1959ம் ஆண்டு ஏற்பட்ட முதலீடுகள் ஆக 17 இலட்சம் ரூபாய்களால் மட்டும் குறைந்தது. முந்திய ஆண்டில் நடந்தது போல், தனிப்பட்டோர் துறையிலிருந்து வந்த கொடுகடன் கேள்வியை ஈடு செய்வதற்காக வங்கிகள் அரசாங்கம் உத்தரவாதமுள்ள கடன்களில் செய்த தங்கள் முதலீடுகளை குறைக்கவேண்டிய நெருக்கடி எழுந்திருந்ததாகத் தெரியவில்லை.

1959ம் ஆண்டு புரட்டாதி மாதத்துடன் முடிவுற்ற ஒருவருடகாலத்தில் ஏற்பட்ட வங்கிகளின் கொடுகடன் அதிகரிப்பு, நிதியீட்டல், வர்த்தகம், நுகர்ச்சி, ஆகிய தேவைகளுக்காக வழங்கப்பட்டமையால் ஏற்பட்டது என வங்கி வைப்புக்கள், முற்பணம் முதலியவற்றின் அரை வருட அளவைவிபரங்களின்படி, தெரிகிறது. நிதித்தேவைகளுக்கான முற்பணம் 121 இலட்சம் ரூபாய்களாலும், வர்த்தகத் தேவைகளுக்கான முற்பணம் 95 இலட்சம் ரூபாய்களாலும், நுகர்ச்சித் தேவைகளுக்கான முற்பணம் 53 இலட்சம் ரூபாய்களாலும் உயர்ந்தன. வியாபார இருப்புகளுக்கு எதிராக வழங்கப்

தீர்வைவிகிதங்களும், இறக்குமதிகளின் அதிகரிப்புமே, இறக்குமதி தீர்வைகளில் இருந்து கிடைத்த வருமான அதிகரிப்புக்கு முக்கிய காரணங்களாகும். முக்கிய அரசிறை விடயங்களுக்குள்ளே (தோட்டங்களின் வரி முதலியனவற்றையும் சேர்த்த) வருமான வரி ஒன்று தான் 1957–58க்கும் 1958–59க்கும் இடையில் வீழ்ச்சியைக் காட்டியது. 1957–58 ஆண்டு கிடைத்த 2890 இலட்சம் ரூபாய்களில் இருந்து 1958–59ம் ஆண்டு 2295 இலட்சம் ரூபாய்களுக்கு குறைந்த இவ்வீழ்ச்சி மிகவும் தீவிரமானதாகும். ஓராண்டுக்காலத்தின் பின்னரே (கூட்டு நிலையங்கள் சம்பந்தப்பட்ட வகையில் இன்னும் கூடிய ஆண்டுகளுக்குப் பின்னர்) வருமானங்கள் மதிப்பிடப்படுகின்றமையால் வருமானவரியில் ஏற்பட்ட வீழ்ச்சி 1955ம் 1957ம் ஆண்டுகளுக்கிடையே நிகழ்ந்த ஏற்றுமதியால் கிடைத்த வருமானங்களின் வீழ்ச்சியையே பெரும்பாலும் பிரதிபலிக்கிறது.

**நடைமுறைச்செலவு:** நடைமுறைச் செலவில் ஏற்பட்ட பெரிய அதிகரிப்பே, 1958–59ல் எழுந்த பணக்குறைப் பெருக்கத்திற்கு காரணமாக இருந்தது. 1957–58ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச்செலவின் அதிகரிப்பு பிரதானமாக சமூக சேவைகளிலேயே ஏற்பட்டிருக்கின்றதெனத் தோன்றுகின்றது. இவ்வதிகரிப்புகள் பின்வருமாறு: கல்வி 341 இலட்சம் ரூபாய்கள், சுகாதாரம் 206 இலட்சம் ரூபாய்கள், மாற்றுக் கொடுப்பனவுகள்: உணவு மான்யம் 350 இலட்சம் ரூபாய்கள்; உபகாரச் சம்பளங்கள் 120 இலட்சம் ரூபாய்கள், பொதுப்படுகடன்பாடுகளின் வட்டி 60 இலட்சம் ரூபாய்கள். 1958–59ம் ஆண்டு அரசாங்கத்திற்கு வங்கிகள் கொடுத்த கடன்களின் தொகை, 1957–58ம் ஆண்டுத்தொகையிலும் பார்க்க ஏறக்குறைய மூன்று மடங்குகளாகும்.

அரசாங்க நிதி இயக்கங்களின் பயனாய் நேரடியாக ஏற்பட்ட பணவீக்கம், (அதாவது அரசாங்கப்பணமீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும், வங்கிகளிட மிருந்து அரசாங்கம் பெற்ற கடனும்) 1957–58ம் ஆண்டு இருந்த 1078 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், அரசாங்கக் கடன் அளவெடுப்பின்படி, 1958–59ம் ஆண்டில் 2410 இலட்சம் ரூபாய்களாகும். 1958–59ம் ஆண்டில் வரவுசெலவுத்திட்டக் காரணமாக ஏற்பட்ட நேரடி வீக்க அதிர்ச்சி, 1957–58ம் ஆண்டிலும் பார்க்க இரண்டரை மடங்கு அதிகமாயிருந்தது. அதே காலத்தில் வங்கிகள் அல்லாத ஏனைய மூலங்களிலிருந்து அரசாங்கம்பட்ட கடன், ஆறு மடங்கு அதிகரித்து, 181 இலட்சம் ரூபாய்களில் இருந்து 1094 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இஃது பிரதானமாக சேமிப்பு நிலையங்கள், காப்புறுதிக் கூட்டு நிலையங்கள், ஒப்படைப்பு நிலையங்கள், சேம உபகாரநிதிகள், முதலிய நிலைய மூலங்களினூடாக அரசாங்கத்திற்கு கிட்டும்படி செய்த தனிப்பட்டோர் சேமிப்புகளின் காரணமாகவே நிகழ்ந்தது. 1957–58ம் ஆண்டு 181 இலட்சம் ரூபாய்களாக இருந்த மேற்படி நிலைய சேமிப்பாளர்களின் இறைசேரி உண்டியல்களையும் அடக்கிய அரசாங்கப்பிணைகளின் கொள்வனவுகள், 1958–59ம் ஆண்டு 769 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. 1957–58ம் ஆண்டு தங்கள் அரசாங்க இருப்பு உடைமைகளை 53 இலட்சம் ரூபாய்களால் குறைத்துக் கொண்ட, முதலீடு செய்யும் ஏனைய தனிப்பட்டோரின் (பிரதானமாக வர்த்தக கூட்டு நிலையங்களின்) நிகர உதவுத் தொகை 1958–59ம் ஆண்டு, 175 இலட்சம் ரூபாய்களாக உயர்ந்தது. வங்கிகல்லலாத ஏனைய துறைகளினது இருப்புக் கொள்வனவுகளின் அதிகரிப்பு, பணத்தை விரிவிக்கும் அரசாங்க நிதிக் கொள்கையால் தனியார் துறையின் பண வருமானம் அதிகரித்ததையும், 1956ம் ஆண்டுக்குப்பின் ஏற்பட்ட ஏற்றுமதிகளால் கிடைக்கும் வருமானச் சீர்திருத்தத்தையும், பொதுவாகப்பிரதிபலிக்கின்றது. அரசாங்க ஆதிக்கமுள்ள நிலையங்கள் பணச்சந்தையில் கடன் படுவதைக் குறைத்துக் கொண்டதும் இதற்கு ஓர் துணைக்காரணமாகும்.

**பொதுப்படுகடன்:** 1958–59ம் ஆண்டு மொத்த முழுக்கடன் 14954 இலட்சம் ரூபாய்களில் இருந்து 18370 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது. மொத்த நிகரக்கடன் 12121 இலட்சம் ரூபாய்களிலிருந்து 15247 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது. 1958–59ம் ஆண்டு முழுக்கடனில் ஏற்பட்ட 3416 இலட்சம் ரூபா அதிகரிப்பு, பெரும்பாலும் பின்வரும் அம்சங்களில் ஏற்பட்டது. ஆறு வெளியீடுகளைக் கொண்ட அரசாங்க ரூபாய்ப்

| | 1951–52 | 1952–53 | 1953–54 | 1954–55 | 1955–56 | 1956–57 | 1957–58 | 1958–59†† |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. நிகரப்பணமிகை அல்லது குறை (—) இயக்கம் .. .. .. | — 2751 | — 2317 | 337 | 1276 | — 12 | — 1964 | — 2223 | — 4134 |
| (அ) அரசிறை .. .. .. .. .. .. .. | 9540 | 9525 | 10262 | 11586 | 12572 | 12605 | 12800 | 13304 |
| (ஆ) செலவு (அதாவது கடன் வாங்குதல், கடன் கொடுத்தல் இயக்கங்களின் பேரில் ஏற்பட்ட நிகர வரவுகளை அல்லது கொடுப்பனவுகளைத் தவிர்த்த மொத்தக் கொடுப்பனவுகள்.) .. .. .. .. . .. .. | —12111 | —11844 | — 9925 | —10310 | —12584 | —14569 | —15023 | —17438 |
| (i) ஆழ்நிதிக்கு வழங்கிய உதவு தொகையையும், அரசிறையிலிருந்து நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படு கடனையும் தவிர்த்த, அரசிறையால் அடைக்கப்படும் செலவு (2. (ஆ) (i)விடயம் பார்க்க)* | —10046 | — 8935 | — 7720 | — 8649‡ | —10144 | —11052 | —12801 | —14322 |
| (உணவு மான்யம்) .. .. .. .. .. | (2472) | (1270) | (120) | (360)‡ | (795) | (1055) | (1120) | (1467) |
| (ii) கடன் செலவும், கடன்நிதிச்செலவும் (கடன் வேலைகளுக்காகக் கொடுக்கப்பட்ட முற்பணங்களையும் சேர்த்து)* .. .. .. .. .. .. | — 2030 | — 2206 | — 1623 | — 2155 | — 2110 | — 2133 | —2826 | — 3034 |
| (iii) தேசிய ஒதுக்கு நிதியால் அடைக்கப்படும் செலவு .. | — 77 | — 64 | — 32 | — 21 | — 40 | — 51 | — 30 | — 24 |
| (iv) களஞ்சியங்கள், பொருட்கள் முதலியனவற்றிற்காகக் கொடுக்கப்பட்ட முற்பணங்கள் .. .. .. | — 168 | — 24 | 46 | 99 | 12 | — 145 | ... | 105 |
| (v) ஏனைய முற்பணங்கள்* .. .. .. .. .. | 190 | — 528 | — 611 | 340‡ | — 303 | — 1158 | 545 | — 171 |
| (vi) ஏனையவை .. .. .. .. .. .. | 20 | — 87 | 15 | 76 | 1 | — 30 | 89 | 8 |

## நிதிக்குறையை நிவர்த்திக்கப்பணம் உதவுதல்

| | 1951–52 | 1952–53 | 1953–54 | 1954–55 | 1955–56 | 1956–57 | 1957–58 | 1958–59†† |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2. அரசாங்கக் கடன்பாட்டு அல்லது கொடுப்பனவு இயக்கங்களின் விளைவாக ஏற்பட்ட நிகரப்பணவரவுகள் அல்லது கொடுப்பனவுகள் (—) .. .. .. .. .. | 1841 | 2165 | — 353 | — 390 | 122 | 1754 | 1747 | 3518 |
| (அ) நிருவாகக் கடன்பாடும், திருப்பிக்கொடுக்கப்பட்ட கடனும் (சில்லறைக்கடன்களையும் சேர்த்து) .. .. | — 342 | 119 | — 46 | 291 | — 365 | — 94 | 725 | 276 |
| (i) கட்டுப்பணங்கள் (வழக்குத்தொடர்வோர், ஒப்பந்தக்காரரர் முதலியவர்களிடமிருந்து வந்தனவையும், அந்நிய நாட்டு உதவிகளின் செலவு செய்யப்படாத மீதிகளும்) .. .. .. .. .. .. | — 162 | 214 | — 21 | 345 | — 108 | 90 | 739 | 273 |
| (ii) ஏனைய பலவகை நிதிகள் (விதவைகள், அநாதைகள் உபகாரச்சம்பளநிதி, அரசாங்கச் சேவையாளர் சேமநிதி முதலியவை) .. .. .. .. | — 6 | — 2 | 3 | — 9 | — 48 | — 23 | 201 | 42 |
| (iii) சில்லறைக்கடன்கள் (கைத்தொழில், கமத்தொழில் நாணயக்கூட்டுத்தாபனம், உள்நாட்டுக் கடன் நிதி, அபிவிருத்திக்கடன்நிதி, உள்ளூர் ஆட்சிச்சபைகள் முதலியனவற்றிற்குக் கொடுத்தவை) .. .. | 186 | — 93 | — 28 | — 45 | — 209 | — 161 | — 215 | — 39 |
| (ஆ) உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடும், திரும்பிக்கொடுக்கப்பட்டகடனும் .. .. .. .. .. .. | — 2183 | 2046 | — 940 | — 802 | 435 | 1662 | 785 | 2887 |
| (i) ரூபாக் கடன்கள் .. .. .. .. .. | 1024 | 800 | 700 | 750 | 745 | 949 | 450 | 950 |
| ஆழ்நிதிக்கு வழங்கிய உதவுதொகையும், அரசிறையிலிருந்து திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படுகடனும் .. .. .. .. .. | **184** | **231** | **226** | **445** | **390** | **311** | **265** | **322** |
| மீதி .. .. .. .. .. .. .. | 840 | 569 | 474 | 305 | 355 | 638 | 185 | 628 |
| (ii) இறைசேரி உண்டியல்கள் .. .. .. .. | 623 | 906 | — 781 | — 449 | 80 | — 30 | 746 | 1790 |
| (iii) மகா வங்கியளித்த முற்பணங்கள் .. .. | 720 | — 15 | — 47 | — 658 | — | 963 | — 138 | 411 |
| (iv) வரிப்பண ஒதுக்குப்பத்திரங்கள் .. .. | — | — | — | — | — | 91 | 8 | 58 |
| (v) ஏனையவை† .. .. .. .. .. .. | — | 586 | — 536 | — | — | — | — | — |
| (இ) அந்நியக் கடன்பாடு .. .. .. .. .. | — | — | 633 | 121 | 52 | 186 | 237 | 355 |
| 3. பணமீதியில் ஏற்பட்ட மாற்றங்கள் (உடனடியாகத் தேறப்பெறக்கூடிய சொத்துக்களையும் சேர்த்து) .. .. | — 730 | — 154 | — 16 | 886 | 110 | — 210 | — 475 | — 617 |

மூலம்: இலங்கை மகா வங்கி

* முந்திய ஆண்டுகளில் நிகழ்ந்து நிதியீட்டப்பட்ட முற்பணக்கணக்குத் தொழிற்பாடுகளின் பேரில் ஏற்பட்ட நட்டங்களையும், கடன் வேலைகளுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களையும், அரசிறையால் அடைக்கப்படும் செலவுக்கு மாற்றியதின்பயனாக எழுந்த ஏட்டு இணக்கங்களைத் தவிர்க்கின்றது. ஆகவே இத் தொகைகள் இலங்கை அரசாங்கத்தின் கணக்குகளில் பிரசுரித்த தொகைகளுடன் ஒத்திருக்கமாட்டாது. முந்திய ஆண்டு அறிக்கைகளில், கடன் வேலைகளுக்காகக் கொடுக்கப்பட்ட முற்பணங்கள் சம்பந்தமாகச் செய்யப்பட்ட ஏட்டு இணக்கங்கள் மாத்திரம் தவிர்க்கப்பட்டது இவ்வறிக்கையில், அதோடு, முற்பணக்கணக்குத் தொழிற்பாடுகளின் பேரில் ஏற்பட்ட நட்டங்கள் சம்பந்தமாகச் செய்யப்பட்ட ஏட்டு இணக்கங்களைத் தவிர்த்தது, முந்திய ஆண்டு அறிக்கைகளில் காட்டப்பட்ட நிகரப்பண மிகைகள்/குறைகள் இயக்கங்களின் பெறுமதிகளை மாற்றுகின்ற தன்று. ஏனெனின் அஃது 1. ஆ (i), 1. ஆ (ii) விடயங்களில் ஈடுசெய்யும் வகையில் மாற்றங்களை உண்டாக்கியிருக்கின்றது.

† அரசாங்க ஆதிக்கமுள்ள முகவர் நிலையங்களிலிருந்து பெற்ற கடன்கள்.

‡ 1954-55ம் ஆண்டுக்கான உணவு மான்யக்கணக்காக விளங்கிய 360 இலட்சம் ரூபாய்கள், முற்பணக்கணக்குகளிலிருந்து அரசிறையில் அடைக்கப்படும் செலவிற்கு 1958-59ம் ஆண்டில் மாற்றப்பட்டது. 1958–59ம் ஆண்டுக்கான தொகைகளிலிருந்து இந்த ஏட்டு இணக்கம் தவிர்க்கப்பட்டு இருக்க (*கீழ் உள்ள குறிப்பைப்பார்க்க) 1954-55ம் ஆண்டுக்கான தொகைகள் உட்சேர்க்கும்படியாகத் திருப்பியமைக்கப்பட்டுள்ளது.

†† தற்காலிகமானது.

பிணைகளில் 950 இலட்சம் ரூபாய் அதிகரிப்பு; நிலுவை இறைசேரி உண்டியலில் வேறெதிலும் இல்லாத மிகுந்த 1800 இலட்சம் ரூபாய் அதிகரிப்பு; மகா வங்கி கொடுத்த முற்பணத்தில் 411 இலட்சம் ரூபாய் அதிகரிப்பு; பிற நாட்டுக் கடனில் ஏற்பட்ட 197 இலட்சம் ரூபாய் அதிகரிப்பு (இத்தொகை, கொடுக்கப்பட்ட 135 இலட்சம் ரூபாய் ஸ்டேர்லிங் கடனையும், அந்நிய கடன் ஒப்பந்தங்களின் கீழ் பெற்றுக் கொண்ட 355 இலட்சம் ரூபாய்க் கொள்வனவையும் முக்கியமாகக் காட்டுகிறது).

1958–59ம் நிதி ஆண்டில், இறைசேரி உண்டியல்களின் அனுமதிக்கப்பட்ட மேல்வரை எல்லை 2000 இலட்சம் ரூபாய்களில் இருந்து 3500 இலட்சம் ரூபாய்களுக்கு சித்திரை மாதம் ஒன்பதாம் திகதியன்று உயர்த்தப்பட்டது. இம் மேல்வரை எல்லை ஐப்பசி மாதம் 29ம் திகதி 4500 இலட்சம் ரூபாய்களுக்குப் பின்பும் உயர்த்தப்பட்டது.

அரசாங்க நடைமுறைச் செலவில் மிகப்பெரிய அளவில் அதிகரித்த தனி விடயம், உணவு மான்யக் கணக்கு ஆகும். இது 1957–58ம் ஆண்டில் இருந்த 1120 இலட்சம் ரூபாய்களில் இருந்து 1958–59ம் ஆண்டில் 1467 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. 480ம் அமெரிக்க பொது சனச் சட்டத்தின் கீழ் செய்த ஒப்பந்தத்தின்படி, ஐக்கிய அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, கோதுமை மா, முதலியவற்றிற்கு கொடுக்கப்பட்ட உயர்ந்த விலைகளும், உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு அரிசிக்கொள்வனவு அதிகரித்தமையுமே, இந்த உணவு மான்யக் கணக்கில் ஏற்பட்ட அதிகரிப்புக்குப் முக்கிய காரணங்களாக இருந்தன.

**மூலதனச் செலவு:** வரவுச் செலவுத்திட்டத்தில், மூலதனச் செலவுக்கென ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட 6528 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1958–59ம் ஆண்டு உண்மையாக ஏற்பட்ட மூலதனச் செலவாகிய 5013 இலட்சம் ரூபாய்கள், ஒரு கணிசமான வீழ்ச்சியைக் காட்டுகின்றது. ஆனால் அது 1957–58ம் ஆண்டு ஏற்பட்ட மூலதனச் செலவாகிய 4986 இலட்சம் ரூபாய்களிலும் பார்க்கச் சிறிது உயர்ந்ததாகும். 1957–58ம் ஆண்டு மெய்ச்சொத்துக்களின் பேரில் ஏற்பட்ட செலவைப்பற்றி கிடைத்திருக்கும் விபரங்களை, விபரமான தொழில்பாட்டுப்படி பிரித்தறிய இயலாதெனினும், 1958–59ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மூலதனச் செலவு அதிகரிப்பு விவசாய அபிவிருத்தியிலும், கல்வியிலும் நிகழ்ந்திருக்கின்றன என்பதைக் சுட்டிக் காட்டுக்கின்றன.

**நிதிக்குறையை நிவர்த்திக்கப்பணம் உதவுதல்:** பின்வரும் அட்டவணை, 1958–59ம் ஆண்டு ஏற்பட்ட நிகரப்பணக்குறை, நிவர்த்தி செய்யப்பட்ட முறையை மூலாதாரப்பாகுபாடு செய்து முந்திய ஆண்டுடன் ஒப்பிட்டுக்காட்டுகிறது.

*அட்டவணை 10.*

இலட்சம் ரூபாய்களில்

| | 1957/58 | | 1958/59 (திருத்தத்திற் குரியது) | |
|---|---|---|---|---|
| 1. நிருவாகக்கடன்பாடு .. .. .. .. | 7,25 | | 2,76 | |
| 2. அந்நியகடன்பாடு .. .. .. .. | 2,37 | | 3,55 | |
| 3. சந்தைக் கடன்பாடு–வங்கியல்லாத ஏனைய மூலங்கள். | 1,81 | | 10,94 | |
| 4. சந்தைக் கடன்பாடு–வங்கிகளிடமிருந்து .. .. | 6,03 | 10,78 | 17,93 | 24,10 |
| 5. கை இருப்புப் பணத்தில் ஏற்பட்ட குறைவு .. | 4,75 | | 6,17 | |
| 6. நிகரப் பணக்குறை இயக்கம் .. .. .. | —22,23 | | —41,34 | |

மூலம்: இலங்கை மகா வங்கி

இந்த மதிப்பிடப்பட்ட பணக்குறையை நிவிர்த்தி செய்வதற்காக உள்நாட்டுச் சந்தையில் இருந்து கடன்படுதலை 1600 இலட்சம் ரூபாய்களுக்கு வரையறுத்து, மீதியை பிற

நாட்டு உதவி கொண்டு நிவிர்த்தி செய்வது என்றே 1958ம் ஆண்டு ஆடிமாதம் நிதிஅமைச்சர் நிகழ்த்திய வரவு செலவுதிட்டப் பிரசங்கத்தில் கூறப்பட்டு இருந்தது. 1958–59ம் ஆண்டில் பிறநாடுகளிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட கடன்கள், கொடைகள், முதலிய பிறநாட்டு உதவிகளின் மொத்தப் பெறுமானம் 3000 இலட்சம் ரூபாய்கள் ஆகும். ஆயினும் உண்மையாகப் பெற்றுக் கொண்ட பிறநாட்டு உதவியின் தொகை 538 இலட்சம் ரூபாய்கள் மாத்திரமே. வரவு செலவுத்திட்ட ஏற்பாட்டின்படி, எதிர்பார்த்த பிறநாட்டு உதவி கிடைக்காமையால், உள்நாட்டுச் சந்தையில் இருந்து, குறிப்பாக வங்கிகளிடமிருந்து கணிசமான தொகை கடன்பட்ட வேண்டிநேர்ந்தது. 1958–59ம் ஆண்டில் உள்நாட்டுச் சந்தையில் இருந்து கடன்பட மொத்தத்தொகை 2887 இலட்சம் ரூபாய்களாகும். இதில் மகா வங்கி 1774 இலட்சம் ரூபாய்களையும், வர்த்தக வங்கிகள் 19 இலட்சம் ரூபாய்களையும் கொடுத்தன.

**1959-60 வரவு செலவுத்திட்டம்.**

ஆரம்பத்தில் 1959–60ம் ஆண்டுக்கு, நிதியமைச்சரால் உத்தேசிக்கப்பட்ட அரசிறைத் திட்டம் பின்வருமாறு:–

**1959 – 60 ஆரம்ப வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்**

அட்டவணை 11. இலட்சம் ரூபாய்களில்

| | |
|---|---|
| நடை முறைச் செலவு ( ஆழ்நிதியின் உதவு தொகை நீக்கி ) .. .. | 1,26,59 |
| மூலதனச் செலவு (வரவு செலவுத் திட்டப்படி) .. .. .. .. | 47,65 |
| மொத்த வரவு செலவுத் திட்டச் செலவு .. .. .. .. | 1,74,24 |
| அரசிறை .. .. .. .. .. .. .. .. | 1,37,55 |
| மதிப்பிடப் பட்ட வரவு செலவுத் திட்டக் குறை .. .. .. .. | 36,69 |

மூலம்: இலங்கை மகா வங்கி

நிதியமைச்சர் குறித்துக்காட்டிய நிதி மூலாதாரங்களாவன: உள்நாட்டுச் சந்தைக் கடன்படுதலினால் 1500 இலட்சம் ரூபாய்கள். பிறநாட்டு உதவியினால் 1250 இலட்சம் ரூபாய்கள். வழக்கமான நிதி ஆதாரங்களிலிருந்து 500 இலட்சம் ரூபாய்கள்.

**அரசிறை:** மதிப்பிடப்பட்ட அரசிறை வருமானத்தில், 320 இலட்சம் ரூபாய் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட புதிய வரிகள் மூலம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இப் புதிய வரி நடவடிக்கைகளில் முக்கியமானவை–விலையுயர்ந்த மோட்டார் வண்டிகள், எரியெண்ணை, மணிக்கூடுகள், இறக்குமதி செய்யப்படும் மதுபானவகைகள், முதலியனவற்றின் இறக்குமதித்தீர்வைகளின் உயர்ச்சி, சாராய விற்பனை விலையின் அதிகரிப்பு, தெங்கு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதித் தீர்வை உயர்ச்சி, முதலியனவாகும்.

**நடைமுறைச் செலவு:** 1958–59ம் ஆண்டுக்குரிய ஆரம்ப வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 12124 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில் 1959–60ம் ஆண்டுக்குரிய நடைமுறைச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு, பெரும்பாலும் சுகாதாரம், கல்வி முதலிய சமூக சேவைகளின் தொகுதியிலேயே செறிந்திருக்கின்றது.

**மூலதனச் செலவு:** வரவு செலவுத் திட்டப்படியும், அதற்கு மேலதிகமானதுமான மொத்த மூலதனச் செலவு 5463 இலட்சம் ரூபாய்களாகும். 1958–59ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட (அரசாங்கப்பிரதி நிலையங்களுக்கு வழங்கிய கடன்களை விலக்கிய) 6399 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில் மேற்படி தொகை குறைந்ததெனினும், 1958–59ம் ஆண்டுக்குரிய உண்மையான மூலதனச் செலவுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டின் மூலதனச் செலவு ஏறக்குறைய 950 இலட்சம் ரூபாய் உயர்ச்சியைக் காட்டுகின்றது.

**உத்தேசிக்கப்பட்ட நிதி ஆதாரங்கள்:** வங்கிகளல்லாத உள்நாட்டுப் பணச் சந்தை மூலம் கிடைக்கும் என மதிப்பிடப்பட்ட 1500 இலட்சம் ரூபாய்கள் மேற்படி துறையிலிருந்து 1958–59 ஆண்டு உண்மையாகக் கிடைத்த தொகையிலும் பார்க்க 400 இலட்சம் ரூபாய்கள்

கூடியதாகும். அரசாங்க அரசிறைக் கொள்கை காரணமாக ஏற்பட்ட பண வருமான விரிவு, ஏற்றுமதி வருவாய்களின் சீர்திருத்தம், ஊழியர் சேம நிதியினது அதிகரித்த சேகரிப்புக்கள், ஆகியவற்றை மனதில் கொண்டே இந்த உயர்ந்த மதிப்பீடு செய்யப் பட்டது. ஊழியர் சேம நிதியின் வியாபகம் 1959ம் ஆண்டு மார்கழி மாதம் கணிசமான அளவு விரிவாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## (ஈ) சென்மதி நிலுவையும், இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துகளும்.

1959ம் ஆண்டிற்குரிய இலங்கையினது சென்மதி நிலுவை, பின்னிணைப்பில் உள்ள அட்டவணைகளில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. 1959ம் ஆண்டு நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட நிலுவை, இலங்கைக்கு 1770 இலட்சம் ரூபாய் பாதகமானது என தற்காலிக மாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1958ம் ஆண்டு 1530 இலட்சம் ரூபாய்கள் பாதகமாக இருந்தமை ஒப்பிடத்தக்கது. இறக்குமதிச் செலவு பெரிதும் அதிகரித்ததனுல் வணிகப் பொருட் கணக்கில் ஏற்பட்ட சென்மதி காரணமாகவே 1959ம் ஆண்டு சென்மதி நிலுவை நிலைமையில், இச்சீர்கேடு நிகழ்ந்தது. முந்தைய வருடம் வணிகப் பொருட்கணக்கில் கிடைத்த 80 இலட்சம் ரூபாய் மேலதிகமிச்சத்துடன் ஒப்பிடுகையில், 1959ம் ஆண்டு 952 இலட்சம் ரூபாய் குறை ஏற்பட்டது, ஆயினும் நடைமுறைச் சேவைகள் கணக்கில் தனிப்பட்டோர் அனுப்பிய பணங்களும், குடி பெயர்வோரின் மாற்றங்களும் குறைந்து, இலங்கைக்குக் கிடைத்த நன்கொடை வருவாய்கள் அதிகரித்தமையால், ஏற் பட்ட சீர்திருத்தம் மேற்படி குறையின் ஒருபகுதியை ஈடு செய்ய உதவியது.

**நடைமுறைக் கட்புலனுகா விடயங்கள்:** 1959ம் ஆண்டு நன்கொடைகள் பெரிய அளவில் அதிகரித்து, 1012 இலட்சம்* ரூபாயாக உயர்ந்தமையால், கட்புலனுகா விடயங் களின் பேரில் ஏற்படத்தக்க குறை குறிப்பிடும்படியாகச் சிறிதாகிற்று. 1959ம் ஆண்டு நன்கொடைகளையும் சேர்த்த கட்புலனுகா விடயங்களின் நடைமுறைக் கணக்கில் மொ த்தம் 816 இலட்சம் ரூபாய்கள் குறைவு ஏற்பட்டது.

வெளிநாட்டுப் பிரயாணத்தின் பொருட்டு எழுந்த நிகரக் கொடுப்பனவுகள், கிட்டத் தட்ட முந்திய ஆண்டு மட்டத்திலேயே தங்கி நின்றன. 1957ம் ஆண்டு, 796 இலட்சம் ரூபாய்களாக இருந்த, ஏற்றிஇறக்கல், காப்புறுதி ஆகியவற்றின் பொருட்டு உண்டான நிகரக்குறை, 1958ம் ஆண்டு 213 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைந்தது ஆயினும், 1959ம் ஆண்டு 294 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது. கப்பற் கட்டணங்கள் உயர்ந்த மையாலும், வர்த்தகப் பொருட்களின் அளவு அதிகரித்தமையாலும், ஏற்றி-இறக்கல் காப்புறுதி ஆகியவற்றின் பொருட்டு உண்டான சென்மதிகளில் அதிகரிப்பு ஏற்பட்டது. துறைமுகத்திலிருந்து கிடைத்த வருமானம் முந்திய ஆண்டின் உயர்ந்த மட்டத்திலேயே தொடர்ந்து இருந்து வந்தது.

1959ம் ஆண்டு முதலீட்டு வருமானத்தின் பேரில் கொடுக்கப்பட்டு வெளியேறிய 348 இலட்ச ரூபாய்கள், 1958ம் ஆண்டுக்குரிய தொகையிலும் பார்க்க சிறிது குறைந் தது ஆகும். பிரித்தானிய நாட்டின் உடைமையிலிருந்த (போர்த்) தளங்கள் இலங்கை அரசாங்கத்தால் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து முதன்முறையாக 1958ம் ஆண்டு நிகரக் குறை அடைந்த அரசாங்கச் செலவுகள், தொடர்ந்தும் அப்படியே தங்கி நின்றன. தற்காலிக விபரங்களின்படி 1959ம் ஆண்டில் நிகரக்குறை 9 இலட்சம் ரூபாய்களாகும்.

1958ம் ஆண்டு அதிகரிப்பைக் காட்டிய தனிப்பட்டோர் அனுப்பிய பணம், குடி பெயர்வோர் கைமாற்றங்கள், முதலியனவற்றின் பேரில் ஏற்பட்ட நிகர வெளியேற்றம், 1959ம் ஆண்டு வீழ்ச்சியடைந்தது. இவற்றின் பொருட்டு வெளியேறிய பணத்தின் மொத்தமாகிய 558 இலட்சம் ரூபாய்கள், 1958ம் ஆண்டுக்குரிய தொகையிலும் பார்க்க

*அந்நிய நாணயத்தில் கொடுப்பனவு தேவைப்படாத ஐக்கிய அமெரிக்காவின் 480-ம் பொது ஜனச்சட்டத்தின் கீழ் பெற்ற தொழில் நுட்ப உதவியும் இதில் அடங்கும்.

கிட்டத்தட்ட 220 இலட்சம் ரூபாய்கள் குறைந்தது ஆகும். பராமரிப்பு குடிபெயர்வோர் கைமாற்றங்கள் ஆகிய காரணங்களுக்கு, குறிப்பாக இந்தியாவுக்கு, அனுப்பப்பட்ட பணங்களின் வீழ்ச்சி காரணமாகவே மேற்கூறிய விடயங்களின் பொருட்டு அனுப்பப்பட்ட தொகையும் குறைந்தது.

**தனிப்பட்டோர் மூலதனம்:** 1958ம் ஆண்டு, கணிசமான முறையில் குறைந்த தனிப்பட்டோர் மூலதனக் கணக்கின் பேரில் உண்டான நிகர வெளியேற்றம் தொடர்ந்து இவ்வாண்டும் தாழ்வாகவே தங்கி நின்றது. 1959ம் ஆண்டில் இவ்வகை வெளியேற்றம் 10 இலட்சம் ரூபாய்கள் என தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. பிரதானமாக அந்நிய உடைமைத் தோட்டங்களின் ஒழிப்பினால் எழுந்த அந்நிய மூலதனம், இலங்கையில் கூட்டப்பட்ட ரூபா வர்த்தகக் கூட்டு நிலையங்களில் உள்ள, இலங்கையை வாசஸ்தலமாகக் கொள்ளாதாரின் பங்கு உடைமைகள், ஆகிய தனிப்பட்டோர் மூலதனக் கணக்கின் பேரில் அனுப்பப்பட்ட பணங்கள் குறைந்து இருந்திருக்கின்றன. சிலவகை மூலதனக்கைமாற்றங்களின் பேரில் 1957ம் ஆண்டு ஆவணி மாதம் விதிக்கப்பட்ட தடைகள் தொடர்ந்து அமுல் நடத்தப்படுவதே இக்குறைவுக்கு முக்கிய காரணமாகும். நேரடி முதலீட்டுக்காக இலங்கைக்கு வந்த தனிப்பட்டோர் மூலதனம் மிகவும் சிறியளவில் இருந்தது.

**நிதியீட்டக் கணக்கு:** வணிகப் பொருட்கள் நிலுவை வீழ்ச்சியின் ஒரு பகுதி கட்புலனாகா விடயங்கள் கணக்கின் பேரில் உள்ள குறைமட்டம், குறைந்தமையால் ஓரளவு ஈடு செய்யப்பட்டது. எனினும் அது நடைமுறைக் கணக்கின் பேரில் இருந்த குறைவைக் கூட்டியதோடு இலங்கையின் வெளிநாட்டுச் சொத்தின் மட்டத்தை முந்திய ஆண்டிலும் வை பார்க்க மிகப் பெரிய அளவில் குறைத்தது. தனிப்பட்டோர் மூலதனக் கணக்கில் ஏற்பட்ட நிகர வெளியேற்றம், 1958ம் ஆண்டைப்போலவே 1959ம் ஆண்டிலும் அற்பமாக இருந்தது. 1959ம் ஆண்டு சில விசேடக் கொடுபனவுகளும் ஏற்பட்டன. சர்வதேசப் பண நிதியில் இலங்கையின் பங்கு அதிகரிக்கப்பட்டதன் விளைவாக, கொடுப்பதற்கு ஒப்புக்கொண்ட கட்டுப்பணத்தில் 25 சதவீதமான 375 இலட்சம் ரூபாய்கள் அனுப்பப்பட்டது ஓர் முக்கிய விடயமாகும். சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கியிடம் பட்டகடனில் திருப்பிக் கொடுக்கப்பட்ட தவணைக்கட்டணம் 24 இலட்சம் ரூபாய்கள் ஆகும்.

1959ம் ஆண்டுக்குரிய சென்மதி நிலுவையில் ஏற்பட்ட குறைவுக்கு நிதியீட்டப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:–

(அ) இலங்கையின் வெளிநாட்டுச் நாணய உடைமைகளிலிருந்து பற்றிய தொகை 1945 இலட்சம் ரூபாய்கள்.

(ஆ) இருபக்க உடன்படிக்கைகளின் கீழ் உள்ள நிலுவை நிலைமையில் ஏற்பட்ட நிகர மாற்றம் 175 இலட்சம் ரூபாய்கள்.

(இ) அரசகரும நீண்ட காலப் பொறுப்புகளின் அதிகரிப்பு, 367 இலட்சம் ரூபாய்கள்.

(ஈ) ஏனைய குறுகிய கால மூலதனத்தின் அதிகரிப்பு 24 இலட்சம் ரூபாய்கள்.

இருபக்க உடன்படிக்கைகளின் கீழ் பின்போடப்பட்ட கொடுப்பனவுப் பொறுப்புக்காளாவதன் மூலம், 1958ம் ஆண்டு உள்ள குறைக்கு நிதியீட்டப்பட்டது. ஆனால் 1959ம் ஆண்டு அந்நிய ஒதுக்குநிதியிலிருந்து எடுத்து, குறை நிவர்த்திக்கப்பட்டது. 1958ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1959ம் ஆண்டு, இருபக்க உடன்படிக்கைகளின் கீழ் உள்ள கொடுக்கல் வாங்கல்களின் நிகரப்பயன் ஒரு குறிப்பிடும்படியான மாற்றத்தைக் காட்டிற்று. இருபக்க உடன்படிக்கைகளின் கீழ் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து வந்த அழுத்தக் கோரிக்கைகள், 1959ம் ஆண்டு 119 இலட்சம் ரூபாய்களால் குறைந்தது. 1958ம் ஆண்டு 513 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்த, பின்போடப்பட்ட கொடுப்பனவுப் பொறுப்புக்கள் 1959ம் ஆண்டு 294 இலட்சம் ரூபாய்களால் குறைவுற்றன.

**அந்நிய ஒதுக்கு நிதிகள்:** இலங்கையினது சென்மதி நிலுவையில் ஆண்டாண்டு குறைவு ஏற்பட்டதன் பயனாக இலங்கையின் அந்நிய ஒதுக்குநிதியில் ஓர் கணிச மான வீழ்ச்சி ஏற்பட்டது. 1959ம் ஆண்டு மார்கழி மாதம் முடிவுற்ற மூன்று ஆண்டுகளில் இலங்கையின் வெளிநாட்டு சொத்துக்கள் 1957ம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்த 11790 இலட்சம் ரூபாய்கள் மட்டத்திலிருந்து, 4900 இலட்சம் ரூபாய்களால் குறைந்து, 1959ம் ஆண்டு முடிவில் 6890 இலட்சம் ரூபாய்களாக நின்றது. 1959ம் ஆண்டில் மட்டும் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1950 இலட்சம் ரூபாய்க ளால் குறைந்தது. 1958ம் ஆண்டு, சென்மதி நிலுவைக் குறைவின் முழுத்தாக்குதலை இலங்கையின் வெளிநாட்டுச் சொத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி பிரதி பலிக்கவில்லை. ஏனெ னில் இத்தாக்குதல், பெரும்பாலும் இருபக்க உடன்படிக்கைகளின் கீழ் ஏற்பட்ட இயக் கங்களிலிருந்து ஒன்று சேர்ந்த இலங்கையின் பொறுப்புகள் அதிகரித்தமையால் ஆற் றப்பட்டது. இதற்கு மாறாக 1959ம் ஆண்டு, வெளி நாட்டு ஒதுக்கு நிதியிலிருந்து எடுக்கப்பட்ட பணத்திலிருந்தே, பெரிய அளவு சென்மதி நிலுவைக்குறை பெரும்பா லும் நிவர்த்திக்கப்பட்டது

ஏற்றுமதியினால் கிடைக்கும் வருமானங்கள்] அதிகரித்தும், வர்த்தகமாற்று விகிதம் அனுகூலம் தரக்கூடிய சீர்திருத்தம் அடைந்திருந்தும், இக்காலத்தில் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துகளின் இழப்பு நிகழ்ந்திருக்கின்றதென்பது கவனத்துக்குரியது. இந்தப் போக்குத் தொடருமாயின் வேறு முக்கிய ஆதாரம் இல்லாத பட்சத்தில், சென் மதி நிலுவைக்குறைவின் முக்கிய பகுதி, தற்பொழுதே கீழ்மட்டத்துக்கு வந்துள்ள வெளிநாட்டு ஒதுக்கு நிதியிலிருந்தே, நிவர்த்திக்கப்படல் வேண்டும். மேலும் ஒருநிலை யான வரவு செலவுத் திட்டக்குறைவும், பத்து ஆண்டுத் திட்டத்தின் தீவிரமான தொ ழிற்பாடும், வெளிநாட்டுச் சொத்தின் பேரில் உள்ள அமுக்கத்தை மேலும் அதிகரிக்கும். இது வெளிநாட்டுச் சொத்தின் நிலைமையை மேலும் தளர்த்திவிடும். அந்நியச் செலா வணியின் தற்போதய கேள்வி விகிதத்தை ஈடு செய்யும் அளவுக்கு இப்போது உள்ள வெளிநாட்டுச் சொத்து மட்டம் இல்லை. மேலும் நிதானமாக அதிகரித்துக் கொண்டு வரும் செலவு விகிதத்தை எதிர் காலத்திலும் ஈடு செய்யும் அளவுக்குக்கூட இம்மட் டம் இல்லை. எனவே எங்கள் வெளி நாட்டுச் சொத்தில் பாரதூரமான வீழ்ச்சி ஏற் படுவதைத் தடுப்பதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் அவசியமாகின்றது. வெளிநாட்டுச் சொத்தின் எதிர்கால உபயோகம் பற்றி எச்சரிக்கையாக இருத்தல் மிக வும் அத்தியாவசியமாகும்.

## III. கொள்கைகளும் நடவடிக்கைகளும்.

1958ம் ஆண்டு அறிக்கையில் பொருளாதார வளர்ச்சி பெறாத இலங்கைபோன்ற நாடுகளில் நிலவும் விசேடமான தன்மைகள், எப்படி மகா வங்கியின் செயலாற்றத் திற்கு ஓர் இயல்பான எல்லையை வரையறுக்கும், என்பது கவனத்திற்கு கொண்டுவரப் பட்டது. கடந்த ஆண்டு அறிக்கையில் அழுத்தமாகச் சொல்லப்பட்டப்படி, இலங்கையில் மகா வங்கியின் செயலாற்றத்தைத் தடை செய்யும் இரு முக்கியமான தன்மைகளா வன: பணச் சந்தையின் விருத்தியடையாத்தன்மையும், பொருளாதார இயக்கத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகள் மகா வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ளன என்ற உண்மையுமே ஆகும். அத்தகைய காரணிகளில் ஒன்றான அரசாங்க அரசிறைக் கொள்கை 1959ம் ஆண்டுக்கு முன் ஒரு போதும் இல்லாத அளவுக்கு விசுவரூபம் எடுத்தது. அரசாங்கம் பாரமேற்றுக் கொண்ட அரசிறைக் கொள்கையாலும் ஏனைய கொள்கைகளாலும் பணம் சம்பந்தப்பட்ட செயலாற்றத்தைப் பயன்படத்தக்க முறையில் நடத்த மகா வங்கியின் ஆற்றல் பாரதூரமான வகையில் வரையறுக்கப்பட்டது. ஏனைய பகுதிகளில் அரசாங்க ஆதரவு இன்றி, நாணய சம்பந்தமான காரணங்கள் மூலமாக மட் டும் நினைத்த குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ள முடியுமா என்பது பற்றிப் பல நாடுகளில் கொள்கை சம்பந்தமான சர்ச்சைகள், தர்க்கங்கள், இருந்து வருகின்றன.